**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்த இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பொன்விழா கொண்டாடும் சென்னை அண்ணா மேம்பாலம்.**



# இடம் பொருள் கலைஞர் 24



# தம்பிக்கு 100... ‘அண்ணா’வுக்கு 50..!

சென்னை மெரினா கடற்கரையை ஒட்டி இருக்கும் தலைமைச் செயலகம் முதல் கிண்டி வரை, சுமார் 15 கிலோ மீட்டர் நீளத்துக்கு நீண்டிருக்கிறது, அண்ணா சாலை. 1969–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், **‘மவுன்ட் ரோடை’, ‘அண்ணா சாலை’** என்று பெயர் மாற்றினார். மெரினாவில் அண்ணா சமாதியை நிறுவினார். அண்ணாவின் பெயரில் பல திட்டங்களைக் கொண்டு வந்தார்.

அந்த வரிசையில், தொழில்துறையிலும், மக்கள்தொகையிலும், பொருளாதாரத்திலும் வளர்ந்து வந்த சென்னையின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஏற்படுத்தப்பட்ட இந்த மேம்பாலத்துக்கு அண்ணாவின் பெயரையே சூட்டி அழகு பார்த்தார் கலைஞர்.

சென்னையின் மையப் பகுதியான நுங்கம்பாக்கத்தில், அண்ணா சாலை - நுங்கம்பாக்கம் சாலை - ராதாகிருஷ்ணன் சாலை - ஜி.என். செட்டி சாலைகள் சந்திக்கும் பகுதியில் மேம்பாலம் ஒன்றைக் கட்ட கடந்த 1971–ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டபோது, அதற்கு ரூ.66 லட்சம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

500 மீட்டர் நீளம், 48 அடி அகலத்தில் ஈஸ்ட் கோஸ்ட் நிறுவனத்தால் கட்டப்பட்ட இந்த மேம்பாலம், வெறும் 21 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு 1973–ஆம் ஆண்டு ஜூலை 1 -ஆம் தேதி கலைஞர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

## மணிக்கு 9 ஆயிரம் வண்டிகள்

“இந்தப் பாலம் கட்டப்படாமலிருந்த நேரத்தில் கணக்கெடுத்துப் பார்த்த போது இதே இடத்தில் ஒரு மணி நேரத்தில் இந்த இடத்தைக் கடந்து செல்கின்ற வண்டிகளுடைய எண்ணிக்கை 9 ஆயிரமாக இருந்தது. ஒரு மணி நேரத்தில் 9 ஆயிரம் வண்டிகள் இந்த இடத்தைக் கடந்து சென்றன என்றால், எவ்வளவு சிக்கல் போலீசாருக்கு, வண்டி ஓட்டிச் செல்கின்றவர்களுக்கு, போக்குவரத்தைக் கால்நடையாகவே கொண்டிருக்கின்ற பொதுமக்களுக்கு என்பதை நாம் அனுபவரீதியாகக் கண்டிருக்கின்றோம்" என்று இந்தப் பாலத்தின் திறப்பு விழாவில் கலைஞர் குறிப்பிட்டார்.



## ‘இந்தியாவின் முதல் பெரிய பாலம்’

இந்தப் பாலம், இந்தியாவில் கட்டப்பட்ட மூன்றாவது பெரிய பாலமாகும். மகாராஷ்டிர மாநிலத் தலைநகரான மும்பையில் இதுபோல இரண்டு மேம்பாலங்கள் அப்போதிருந்தன.

‘‘மேம்பாலங்கள் என்றால், இருப்புப் பாதைகளுக்குக் கட்டப்படுபவையும் மேம்பாலங்கள் தான். அதற்கு மாறாக, சாலைகளைக் கடப்பதற்காகக் கட்டப்படும் பாலங்களும் மேம்பாலங்கள் தான் என்று எடுத்துக் கொண்டால், இந்தியாவில் பம்பாய் நகரில் கட்டப்பட்டுள்ள இரண்டு பாலங்களுக்கு அடுத்தபடியாக, இது மூன்றாவது பாலம். கட்டப்பட்டுள்ள பாலங்களில் இது மூன்றாவது என்றாலும், இதில் எது பெரிய பாலம் என்றால், அந்த வரிசையில் இதுதான் முதல் பெரிய பாலம்" என்று கலைஞர் தனது உரையில் கவனப்படுத்தினார்.

## வேடிக்கை பார்க்கவா வெளிநாடு?

கலைஞர் தனது உரையில் மேலும் இப்படிக் குறிப்பிடுகிறார், “வெளிநாடுகளுக்குச் சென்று பார்த்தால், ஒவ்வொரு நாட்டுத் தலைநகரத்திலும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்குப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டின் தலைநகரத்திலும் அந்தத் தலைநகரத்தை அழகுபடுத்துகின்ற அளவுக்கு அழகழகான நதிகள், பேராறுகள், சிற்றாறுகள், அவற்றிலே மிதக்கின்ற ஓடங்கள், படகுகள், அவைகளில் உல்லாசப் பயணிகள் ஏறிச் செல்கின்ற உற்சாகமான பயணங்கள் இவைகளை எல்லாம் அங்கே நாம் காண முடியும்.

வெளிநாட்டிற்குச் செல்வது வேடிக்கை பார்க்க அல்ல. அங்கே கண்டவற்றைக் கருத்திலே நிறுத்தி, முடிந்த அளவுக்கு அதை நாம் தமிழகத்திலே செயல்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுப்பயணங்கள் எல்லாம் ஓரளவுக்கு தமிழகத்திலே செயல்வடிவம் பெற்றிருக்கின்றன. அவைகளிலே ஒன்றுதான் இந்த **அண்ணா மேம்பாலமாகும்**".

## பெயரில் உண்டு நன்றி!

இந்த மேம்பாலத்தின் திறப்பு விழாவின்போதுதான், மர்மலாங் பாலம், ‘மறைமலை அடிகளார் பாலம்’ என்றும், அடையாறு பாலம், ‘தமிழ்த்தென்றல் திரு.வி.க. பாலம்’ என்றும், வாலாஜா பாலம், ‘காயிதே மில்லத் பாலம்’ என்றும், வெலிங்டன் பாலம், ‘பெரியார் பாலம்’ என்றும், ஹாமில்டன் பாலம், ‘அம்பேத்கர் பாலம்’ என்றும், மன்றோ பாலம், இராஜாஜி பாலம்’ என்றும், மதுரையில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த பாலம், ‘பசும்பொன் முத்துராமலிங்கர் பாலம்’ என்றும் அழைக்கப்படும் விதமாக பெயர்களைச் சூட்டினார் கலைஞர்.

இந்தப் பெயர் மாற்றங்கள் குறித்து, அவர் கூறும்போது, “பெயரில் என்ன இருக்கிறது என்று சொல்வார்கள். பெயரில் தமிழ் இருக்கிறது. தமிழ் உணர்வு இருக்கிறது. சமுதாய எழுச்சி இருக்கிறது. சமுதாயத்திற்காகப் பாடுபட்டவர்களுக்குக் காட்டப்படுகிற நன்றி உணர்வு இருக்கிறது".

அந்த நன்றி உணர்வுக்கு அதாவது அண்ணா மேம்பாலத்துக்கு இந்த ஆண்டு பொன்விழா... இந்தப் பாலத்தைக் கட்டிய நன்றிக்குரியவரான கலைஞருக்கு இது நூற்றாண்டு விழா.

‘மவுன்ட் ரோடு’. **‘ஜெமினி பிரிட்ஜ்’ என்று சொல்லாமல், ‘அண்ணா சாலை’ ‘அண்ணா மேம்பாலம்’ என்று சொல்வதே தமிழுக்கும் நம் தலைவர்களுக்கும் நாம் காட்டும் நன்றி!**

**...வலம் வருவோம்**

அண்ணா மேம்பாலத்தின் பொன்விழாவை யொட்டி, மேம்பாலத்தை அழகுபடுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதன்படி மேம்பாலச் சந்திப்பில், கதீட்ரல் சாலை செல்லும் பகுதியில் பல்லவர் கால பாணியில் 6 அடி உயர சிங்கச் சிலை ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மேம்பாலத்தின் நுழைவுப் பகுதி, வெளியேறும் பகுதி என 8 இடங்களில் கல்தூண்கள் அமைக்கப்படவுள்ளன. மேம்பாலத்தின் அருகே புல்தரைகளில் பொதுமக்கள் பார்க்கும் வகையில் தமிழ் எழுத்துகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது பொன்மொழிகளும் தூண்களில் செதுக்கப்படவுள்ளன.

## கழக வரலாற்றின் ‘சாலாம்புரி’!




1957–ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.கழகம் வென்ற பெரும்பாலான இடங்கள் வட தமிழ்நாட்டைச் சேர்ந்தவை. மொத்தம் வென்ற 15 இடங்களில் 12 இடங்கள் வட தமிழ்நாட்டில் இருந்தவை. அப்போது நிகழ்ந்த அரசியல் மாற்றங்களை பேசுகிறது எழுத்தாளர் அ.வெண்ணிலா எழுதி இருக்கும் ‘சாலாம்புரி’ நாவல்.

1957 -ஆம் ஆண்டு தேர்தலின்போது, அப்போதைய வட ஆற்காடு மாவட்டத்தில் தேர்தலுக்கு முன்னும் பின்னும் நெசவாளர்கள் நிறைந்த ஒரு கிராமத்தில், ஒரு குடும்பத்தில், ஒரு தனிமனிதனின் வாழ்க்கையில் நடைபெற்ற அக-புற மாற்றங்களைப் பற்றியதாக இந்நாவல் அமைந்துள்ளது. வெண்மையில் கறுப்பு, சிவப்பு வண்ணங்களை ஏற்றியிருக்கும் துணிக்கு ‘சாலாம்புரி’ என்று பெயர். உழைக்கும் மக்களின் அரசியல் கட்சியாக கழகம் வளர்ந்துகொண்டிருந்த காலகட்டத்தில், கழகத் தொண்டனின் போராட்டங்களை இந்நூல் மூலம் அறிய முடிகிறது. நூலை **‘அகநி பதிப்பகம்’** வெளியிட்டுள்ளது. கலைஞரைப் போற்றும் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் கழக வரலாற்றைப் பேசும் நூலை வாசிப்பதும் நம் கடமை.

## :ப்ளாஷ்பேக்



## செய்தியோடு படம்!



நாகலிங்கம்

1982–ஆம் ஆண்டு ஈழப் போராட்ட இயக்கங்களுக்கு நிதி வழங்கும் நோக்கத்தில், பல தோழர்கள் தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து நிதி அளிக்கத் தொடங்கி இருந்தனர். அப்போது ‘மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்’ நிறுவனத்தைச் சேர்ந்த கழகத் தோழர்கள் மூலம் நிதி வசூல் செய்து தலைவர் கலைஞரிடம் நேரில் சென்று அளித்தோம். சட்டமன்ற தி.மு.க. அலுவலகத்தில் தலைவரைச் சந்தித்து 1,751 ரூபாய் நிதி வழங்கி, ஈழத்தமிழர் போராட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்தோம். எங்களை அவர் பாராட்டினார். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. 1982, பிப்ரவரி 4 அன்று **‘முரசொலி’**யிலும் இப்படம் செய்தியோடு வெளியானது..

**–எம். எஸ்.நாகலிங்கம், பொருளாளர்,**
**திருவொற்றியூர் மத்திய பகுதி தி.மு.க, சென்னை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

## ‘காகிதப் பூ’ நாடகம்!

**1966–ஆம் ஆண்டு, கழகத்தின் தேர்தல் நிதி திரட்டும் பணிகளில் கலைஞரின் ‘காகிதப் பூ’ நாடகம் முக்கியப் பங்கு வகித்தது. அந்த ஆண்டு அண்ணா பிறந்த நாளையொட்டி நடைபெற்ற முப்பெரும் விழாவின், மூன்றாம் நாளில் கலைஞர் எழுதி நடித்த அந்த நாடகம் முதன்முதலாக அரங்கேற்றம் செய்யப்பட்டது. தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட அந்த நாடகத்தின்போது ஒரே நாளில், திருச்சியில் ரூ.13 ஆயிரம், கடலூரில் ரூ.6 ஆயிரம், கள்ளக்குறிச்சி மற்றும் தஞ்சையில் தலா ரூ.10 ஆயிரம், மன்னார்குடியில் ரூ.12 ஆயிரம் என நிதி திரண்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 163

**எழுத்து : கோவி.லெனின்**
**ஓவியம் : கி.சொக்கலிங்கம்**




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131